


# ஜலாலுதீன் ரூமியும்
# வேதாத்திரி மகரிஷியும்

அருள்நிதி மன்னார்குடி பானுகுமார்

## இதனுள்ளே

1. ரூமியும் வேதாத்திரியும் - ஒரு ஒப்பாய்வு
2. இறைவனைக் காதலிப்பது எப்படி?
3. நினைப்பே நடப்பு
4. கடவுளைத் தேடும் பக்தர்கள்
5. மூலத்தை அடைவதே பிறவியின் நோக்கம்
6. கனவுலக வாழ்வைப் பற்றி ரூமி
7. அவனில் தான் நீ! உன்னில் தான் அவன்
8. துன்பம் என்பது ஒரு பரிசு
9. மனிதன் தெய்வமாக மாறலாம்
10. உலகம் போற்றும் ரூமியின் பொன்மொழிகள்
11. உலகம் போற்றும் வேதாத்திரியத்தின் பொன்மொழிகள்
12. எண்ணமே வாழ்க்கையின் சிற்பி
13. கேளுங்கள் கொடுக்கப்படும்
14. அன்பு அன்பு அன்பு
15. முயற்சி முயற்சி முயற்சி
16. ஒரு யுக விழிப்பை ஏற்படுத்தியவர்கள்

உலகின் பல்வேறு காலகட்டங்களில் பல்வேறு சூழலியலில் பல்வேறு நாடுகளில் பற்பல அறிஞர்களும் சித்தர்களும் யோகிகளும் மெய்யறிவாளர்களும் தோன்றியுள்ளார்கள்.

அவர்கள் தோன்றிய சமுதாயமும் உலகமும் அவர்களால் பெரும்பேறு பெற்றன.

அவர்களின் மெய்யியல் கோட்பாடுகளும் அறிவார்ந்த சிந்தனைகளும் ஒரு குறிப்பிட்ட சக மொழி பேசும் மக்களுக்கல்லாமல் உலகம் அனைத்திற்கும் பொதுவானவை.

இவ்வாறு தோன்றிய அறிஞர்களுள் ஜலாலுதீன் ரூமியும் வேதாத்திரி மகரிஷியும் குறிப்பிடத்தக்கவர்கள்.

ஜலாலுதீன் ரூமி "படித்தவர்களின் பண்டிதர்" (SULTAN OF SCHOLARS) என்றழைக்கபட்ட இஸ்லாமிய தத்துவஞானி.

# 1.ரூமியும் வேதாத்திரி மகரிஷியும் ஒரு ஒப்பாய்வு

- 1207 ஆம் ஆண்டு முதல் 1273 ஆம் ஆண்டு வரை 68 ஆண்டுகள் வாழ்ந்த ரூமி என்கின்ற மௌலானா ஜலாலுதீன் ரூமி பதிமூன்றாம் நூற்றாண்டு பாரசீக கவிஞர் ஆவார்.
- வேதாத்திரி மகரிஷி ஒரு தென்னிந்திய தத்துவஞானி, எழுத்து, கவிதை மற்றும் தத்துவம், மெய்யியல் ஆகிய துறைகளில் புலமை பெற்று பல்துறை வித்தகராக விளங்கினார்.
- வேதாத்திரி மகரிஷி 14.8.1911 ல் பிறந்தவர். 95 ஆண்டுகள் வரை வாழ்ந்து 28.03.2006 ல் மறைந்தார்.
- வேதாத்திரி மகரிஷி 20 ஆம் நூற்றாண்டில் அவதரித்த ஆன்மீகப் புரட்சியாளர், பாமர மக்களின் தத்துவஞானி
- மிகவும் பிரபலமான கவிஞர் மட்டுமின்றி விற்பனையிலும் சிறந்து விளங்கிய படைப்புகளைக் கொடுத்தவர் ரூமி. இவரது படைப்புகள் பெரும்பாலும் பாரசீக மொழியிலேயே எழுதப்பட்டுள்ளது.
- **ஜலாலுத்தீன் முகம்மது பல்கி** என்றும் ஜலாலுத்தீன் முகம்மது ரூமி என்றும் பரவலாக மௌலானா **ரூமி** என்றும் அறியப்படுபடுகிறார்.
- ஜலாலுதீன் ரூமி பாரசீக முசுலிம் கவிஞரும், திமானும், இறையியலாளரும் சூபி துறவியுமாவார்.
- இருபது அண்டுகளுக்கு முன்பு வரை கூட ஐரோப்பிய, அமெரிக்கர்களுக்கு ரூமியைப் பற்றி எதுவும் தெரியாது.ஆனால், தற்போது அமரிக்காவில் வேண்டி விரும்பிப் படிக்கப்படும் ஒரு கவிதைப் புத்தகம் உண்டென்றால், அது ரூமியுடையதுதான்.
- அமெரிக்கர்கள், ரூமியின் இலக்கிய நயத்தையும், தத்துவார்த்தமான பாடல் வரிகளையும் மிகவும் சிலாகித்துப் பாராட்டி வருகிறார்கள் தற்போது.
- அவர் 30 செப்டம்பர் 1207 ஆம் ஆண்டு அன்றைய தஜிகிஸ்தான் அல்லது இன்றைய ஆப்கானிஸ்தானில்

பிறந்தவர்- 68 ஆண்டுகள் வரை வாழ்ந்து 17 திசம்பர் 1273 மறைந்தார்.

- கடந்த ஏழு நூற்றாண்டுகளாக ஈரானியர்கள், துருக்கியர்கள் ஆப்கானியர்கள், தஜக்கியர்கள் மற்றும் மத்திய ஆசியாவின் இஸ்லாமியர்கள் இவருடைய ஆன்மீக வழிமுறையை போற்றி வருகிறார்கள்.
- ரூமியின் முக்கியத்துவம் தேச மற்றும் இனங்களை கடந்து பரவியிருக்கிறது.
- இவரது கவிதைகள் உலகின் பலமொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு பல்வேறு வடிவமாற்றங்களை அடைந்துள்ளன.
- ரஷ்யன், ஜெர்மன், உருது, துருக்கி. அராபியன், பெங்காளி. பிரஞ்ச, இத்தரியன், ஸ்பானிஷ் என்று பல மொழிகளில் ரூமியின் சிந்தனைகள் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன.
- பட்டிமன்றம், தியான வகுப்பு, நடனம் என்று பல வகைகளில் அவரின் படைப்புகள் பிரபலமடைந்து வருகின்றன.
- லக்னோவிலுள்ள ரூமி கேட் இவரைக் கௌரவிக்கும் வகையில் கட்டப்பட்டதுதான்.



துருக்கியர்களின் 1999 லிரா கரன்ஸி நோட்டில் ரூமியின் உருவமும், அவருடைய அருங்காட்சியகக் கட்டடமும் இடம் பெற்றுள்ளது.

பொஷியன் பேசம் மக்கள் வாழும் உலகெங்கிலும் உள்ள கட்டங்களிலும் ரூமியும் அவரது கவிதைகளும் பொறிக்கப்பட்டு வைக்கப்பட்டுள்ளது.

2007ஆம் ஆண்டு இவர் அமெரிக்காவின் மிகவும் புகழ்பெற்ற கவிஞர் என்று அறிவிக்கப்பட்டார்.

ரூமியின் படைப்புகள் அனைத்தும் பெர்சிய மொழியில் எழுதப்பட்டவை.

கடந்த இருபது ஆண்டுகளாக மிகப்பெரிய அளவுக்கு எல்லோரும் ஒத்துக் கொள்ளும் ஞானியாக ரூமி ஆகிவிட்டார்.

அவருடைய கவிதை வரிகள் இன்று உலகெங்கிலும், உள்ள சர்ச்சுக்கள், சிகாக் எனப்படுகின்ற யூதர்கள் வழிபடும் இடங்கள், ஏன் ஜென் மடாலயங்களில் கூட பாடப்படுகின்றன.

இதைவிட ஆச்சரியம் பாப், ராக், ஜாஸ் என்று பாடிக் கொண்ருக்கும் நியூயார்க்கின் பிராட்வே தியேட்டர்களில் கூட இப்போது ரூமியின் கவிதை வரிகளுக்கு இசைக்கப்படுகின்றன.

இவரின் மானஸ்வி தூய்மையான பெர்சிய இலக்கிய பெருமையை கொண்டது. இது பெர்சிய மொழிக்கு பெரும் புகழ் சேர்ப்பதாக இருக்கிறது.

- வேதாத்திரி மகரிஷி எழுதியது, பேசியது, பாடியது அனைத்தும் வேதாத்திரியம். இன்று உலகெங்கும் உலா வந்து கொண்டிருக்கிறது.
- உலகில் மனித குலம் சிறப்பாக வாழ, உண்மை நிலை உணர்ந்து உயர்வான வாழ்க்கை நெறிமுறைகளைக் கண்டு அனுபவித்து, அதன் வழி வாழ்ந்து மற்றவரும் சிறப்பாக, அமைதியோடு வாழ வழிகாட்டிய அறிஞர்கள் பலர்.
- அவர்களில், தத்துவ மேதைகள், விஞ்ஞானிகள். மெய்ஞானிகள் அனைவரையும் நினைவு கூர்ந்து, வாழ்வியல் சிந்தனைகள், செயல் திட்டங்களை, மனித குலம் எளிமையாக புரிந்து கொண்டு, உணர்ந்து வாழ அருட்தந்தை வேதாத்திரி

மகரிஷி எனும் வள்ளல் அருளிய அரிய கொடைதான் வேதாத்திரியம்.

- வேதாத்திரியத்தில், அரசியல், ஆன்மீகம், அறிவியல், பொருளியல், கலை, இலக்கியம், கல்வி, மொழியியல், வேளாண்மை, இல்லறம், குழந்தையியல், உடலியல், பாலியல், இசை, ஒழுக்கவியல் போன்றவை பற்றிய தெளிவான தீர்க்க தரிசனமாகத் தீர்வுகள் பதிவு செய்யப்பட்டுள்ளது வியப்பிற்குரியதாகும்.

வேதாத்திரி மகரிஷி சுமார் இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட கவிதைகள் ஞானக்களஞ்சியமாக உலகில் உலா வந்து கொண்டிருக்கின்றன.

உலகெங்கும் உள்ள அறிவுத் திருக்கோயில்களிலும், மனவளக்கலை மன்றங்களிலும் ஏன் சுமார் 30 க்கும் மேற்பட்ட பல்கலைக்கழகங்களில் வேதாத்திரியம் பாடத்திட்டமாகப் போதிக்கப்பட்டு வருகிறது.

தற்போது இணையம் வழியாக ஆன்லைன் வகுப்புகளிலும் வேதாத்திரியம் பயிற்றுவிக்கப்படுகிறது. ( vethathiriam for World Peace – YouTube · SKY Yoga TV)

வேதாத்திரி மகரிஷியின் ஞானக்களஞ்சியம் தமிழ் இலக்கிய பெருமையை கொண்டது. இது தமிழ் மொழிக்கு பெரும் புகழ் சேர்ப்பதாக அமைந்துள்ளது.

இந்தப் பிரபஞ்சத்தைப் பற்றியும் மனித வாழ்க்கையைப் பற்றியும் தவநிலையில் தான் பெற்ற கருத்துக்களைப் பல கவிதைகளாகவும் கட்டுரைகளாகவும் புத்தக வடிவங்களில் இந்த உலகுக்கு மகரிஷி அவர்கள் அளித்துள்ளார்கள்.

ரூமியின் கவிதை அனைத்தும் காதல், ஆன்மீகம், ஏக்கம், புதிர் மற்றும் தவிப்பு என மனித வாழ்வின் நுண் உணர்வுகளை

அதிகமாகப் பேசும். இவர் சூஃபி நிலத்திலும் மனிதர்களின் இதய நிலத்திலும் பயணித்த சுவடுகள் அற்புதமான ஆவணங்கள்.

இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட விஞ்ஞானமும் மெய்ஞ்ஞானமும் கலந்த தமிழ்ப்பாடல்களை வேதாத்திரி மகரிஷி இயற்றியிருக்கிறார்.

பாமர மக்களும் புரிந்து கொள்ளும் வகையில் எளிய தமிழில் தனது தத்துவங்களை எடுத்துரைத்தார். எல்லா மதங்களின் சாரம் ஒன்றே என்பதை மகரிஷி அவர்கள் வலியுறுத்துகிறார்.

1957ல் மகரிஷி 'உலக சமாதானம்' என்னும் நூல் ஒன்றை வெளியிட்டார். தொடர்ந்து பல்வேறு நாடுகளுக்குச் செல்லும் வாய்ப்பு இவருக்குக் கிட்ட அங்கெல்லாம் ஆன்மீகச் சொற்பொழிவு நிகழ்த்தினார்.

மனிதகுலம் அமைதியாக வாழ ஏற்ற கருத்துகளையும் சாதனை முறைகளையும் உலகமெங்கும் பரப்பிட 1958–ஆம் ஆண்டில் வேதாத்திரி மகரிஷி அவர்கள் நிறுவிய உலக சமுதாய சேவா சங்கம்இன்று இந்தியாவிலும், சிங்கப்பூர், மலேசியா, ஜப்பான், தென்கொரியா, அமெரிக்கா போன்ற நாடுகளிலும் பல கிளைகளைக் கொண்டு இயங்கி வருகிறது.

வேதாத்திரி மகரிஷி ஏறக்குறைய தமிழிலும் ஆங்கிலத்திலும் சேர்த்து எண்பது நூல்களை எழுதியுள்ளார். அவற்றில் சில:

1. வேதாத்திரியத்தின் இறைநிலை விளக்கம்
2. வாழ்வியல் விழுமியங்கள்
3. பிரம்மஞான சாரம்
4. நான் யார் ?
5. ஞானக்களஞ்சியம்

கொங்கு நாட்டில் பொள்ளாச்சி நகருக்கு அருகே வால்பாறை மலையோரத்தில் ஆழியாறு நீர்த்தேக்கம் அமைந்துள்ள இடத்தில் அருட்பெருஞ்ஜோதி நகர் எனும் நகரம் வேதாத்திரி மகரிஷியால் 1984 கால கட்டத்தில் அமைக்கப்பட்டது.

*அன்பொளி* என்னும் ஆன்மீக இதழ் ஒன்றையும் வெளியிட்டார். இன்றும் தமிழ், ஆங்கிலம் மொழிகளில் வெளிவருகின்றன.

வேதாத்திரி அவர்கள் தனது 95வது வயதில் மார்ச் 28, 2006 செவ்வாய்க்கிழமையன்று மறைந்தார்.

- சுமார் 800 வருடங்களுக்கு முன்பு வாழ்ந்த ரூமி என்ற மனிதராலும், இருபதாம் நூற்றாண்டில் வாழ்ந்த வேதாத்திரி மகரிஷி என்ற இந்த மனிதராலும். எப்படி இவ்வளவு பெரிய தாக்கத்தை. அவரை வாசிப்பவர் மீது ஏற்படுத்த முடிகிறது எனத் தோன்றும்பொழுது ஆச்சரியம் ஏற்படவே செய்கிறது.
- 2007 ஆம் ஆண்டு இவர் அமெரிக்காவின் மிகவும் புகழ்பெற்ற கவிஞர் என்று "ரூமி நாள் விழா" கொண்டாட்டத்தில் அறிவிக்கப்பட்டார். மேலும் ஐ.நா.வால் ரூமியின் 800-வது பிறந்தநாளை அவர் உருவம் பொறித்த நாணயம் வெளியிடப்பட்டு கொண்டப்பட்டது.
- வேதாத்திரி மகரிஷியின் 100 ஆவது பிறந்தநாளறு அவரது உருவம் பொதித்த அஞ்சல் தலையை தமிழக அரச வெளியிட்டு மகிழ்ந்தது.

மௌலவி என்ற துருக்கிய வார்த்தை "இறைவனுடன் பணியாற்றுபவர்" என்பதைக் குறிக்கிறது. ஒரு கட்டத்தில் அவரின் ஆத்மஞான போதனைகள் உச்சகட்டத்தை அடைந்தது.

அவரின் பிரதான சீடர் ஹுஸாமுதீன் அவர்கள் உதவியுடன் 25600 பாடல்களை எழுதி முடித்தபோது மௌலனா ரூமி அவர்கள் 68 வது வயதில் கி. பி. 1273 டிசம்பர் 16ல் காலமானார். பாரசீகத்தின் மெய்நிலை ஞானத்தைக் கண்ட உன்னதமானவர் ரூமி.

ரூமியிடம் எனக்குப் பிடித்ததே அவரின் முன்னோடிகளை தன் எழுத்துகளில் குறிப்பிட்டது ஆகும்.

வேதாத்திரி மகரிஷியிடம் பிடித்ததே அவரின் முன்னோடிகளான திருமுலர், திருவள்ளுவர். தாயுமானவர், வள்ளலார். முகமது நபி, இயேசு போன்றவர்களையும் தன் கவிதைகளில் குறிப்பிட்டது ஆகும்.

அட்டார் மற்றும் சாணை என்கிற பெர்சிய கவிஞர்களின் தாக்கம் ரூமியிடம் அதிகம் இருந்ததாகக் கூறுகின்றனர்.

ரூமியின் கவிதை அனைத்தும் காதல், ஆன்மீகம், ஏக்கம், புதிர் மற்றும் தவிப்பு என மனித வாழ்வின் நுண் உணர்வுகளை அதிகமாகப் பேசும்.

இவர் சூஃபி நிலத்திலும் மனிதர்களின் இதய நிலத்திலும் பயணித்த சுவடுகள் அற்புதமான ஆவணங்கள்.

இன்றளவும் ரூமியின் படைப்புகளை பெருமளவு பெர்சியர்கள் பெர்சிய மொழியிலேயே படித்து வருகிறார்கள். (இரான், தஜகிஸ்தான், ஆப்கானிஸ்தான் மற்றும் மத்திய ஆசியாவின் பெர்சிய மொழிபேசும் மக்கள்). இவரது படைப்புகளின் மொழிபெயர்ப்புகள் ஏனைய நாடுகளில் மிகுந்த புகழுக்குரியதாக இருக்கின்றன.

இவரின் கவிதைகள் பெர்சிய, உருது, பஞ்சாபி மற்றும் துருக்கிய இலக்கியங்கள் தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கின்றன.

துருக்கிய மற்றும் இண்டிக் மொழிகள் பெரிசியோ அரபிக் வரிவடிவத்தில் எழுதப்படுகின்றான.

பாஸ்த்தோ, ஒட்டாமன், துருக்கி, சாகாடை மற்றும் சிந்தி மொழிகள் இதற்கு உதாரணம்.

- ருமியின் எழுத்துக்களும் வேதாத்திரி மகரிஷியின் எழுத்துக்கள் அனைத்தும் படித்தால், இவர்கள் கஃபியிஜத்தையோ இந்து தத்துவத்தையோ, கிறிந்துவத்தையோ, யூதத்தையோ என்று எதையும் சார்ந்து எழுதாமல் எல்லா மதங்களையும் அரவணைத்தே எழுதியிருப்பதை நாம் காணலாம்.
- ஆனால் யார் மனதையும் புண்படுத்தாமல் எழுதியிருக்கிறார்கள்.

- இவர்களுடைய எழுத்துக்களில் எந்தவித கலாச்சாரப் பாங்கும் இல்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

ரூமியின் பல பாடல்கள், இரானிய, ஆப்கானிஸ்தானிய சங்கீத உலகுக்கே அடித்தளமாக அமைந்துள்ளன.

தற்கால புரிதலுக்கு ஏற்றவாறு ரூமியின் அநேகப் பாடல்கள் மொழி மாற்றம் செய்யப்பட்டுள்ளன.

ஐரோப்பியர்கள், கஃபிஸியத்தைப் பற்றி தெரிந்து கொள்ள ருமியின் எழுத்துக்களையும், பாடல்களையும் படிப்பதுதான் வழக்கம், பழக்கம்.

பாகிஸ்தானின் தேசியக்கவி முகம்மது இக்பாலுக்கு ரூமிதான் மானசீகமான ஆன்மீக குரு.  அவரை பிர் ரூமி என்று செல்லமாக அழைப்பார்.

பிர் என்ற வார்த்தைக்கு, கிழவன் என்றுதான் அர்த்தம் என்றாலும், பஃபியிஸத்தில அந்த வார்த்தைக்கு, குரு, வழிகாட்டி என்றும் பொருள் கொள்வார்கள்

இவர் ஜலாலு-தின் முஹம்மத் ரூ-பெர்சிய உச்சரிப்பு. இவர் இரானிலும் ஆப்கானிஸ்தானிலும் பெரும்பாலானோரால் மௌலானா என்ற சிறப்பு பெயரால்அழைக்கப்பட்டார். துருக்கியர்கள் இவரை மெவ்லானா என்றும் அழைத்தனர்.

சிக்காகோ பல்கலைக்கழகத்தின் பிராங்க்ளின் லூயிசின் ரூமியின் வாழ்க்கை வராலாற்றாய்வு நம்பகத்தன்மைமிக்கது.

இவரின் கூற்றுப்படி பைசாந்திய பேரரசின் அல்லது கிழக்கு ரோமப் பேரரசிற்கு சொந்தமானது அனோடோலியன் குடாநாடு. இது வரலாற்றில் வெகு அண்மையில்தான் இஸ்லாமியர்களினால் வென்றெடுக்கப்பட்டது.

இது துருக்கிய இஸ்லாமிய ஆட்சியாளர்களால் ஆளப்பட்டபோதும் அரபியர்களும், பெர்சியர்கள், துருக்கியர்கள் இந்த நிலப்பரப்பை ரம் என்றே அழைத்து வந்தனர்.

எனவே அனோடோலியாவில் பிறந்த பல வரலாற்று பிரமுகர்களும் ரூமி என்கிற பெயரில் அழைக்கப்பட்டனர்.

ரூமி என்கிற வார்த்தை அரபி மொழியில் இருந்து பெறப்பட்ட வார்த்தை. இதன் அர்த்தம் ரோமன். இந்தத் தொடர்பில் நோக்கினால் ரோமன் என்பது பைசாந்திய பேரரசின் குடிமக்களை குறிக்கிறது

அல்லது அநோடோலியாவில் வாழ்ந்த மக்களையும் அதனோடு தொடர்புடைய பொருட்களையும் குறிக்கிறது.

இக்காரணங்களால் இஸ்லாமிய நாடுகளில் பொதுவாய் ஜலாலுதீன் ரூமி என்ற பெயரில் அழைக்கப்படுவதில்லை.

பெர்சிய வார்த்தையான மௌலவி என்றோ துருக்கிய வார்த்தையான மெவ்லவி என்றோ அழைக்கப்படுகிறார். இவ்வார்த்தை "இறைவனுடன் பணியாற்றுபவர்" என்கிற பொருளுடையது.

## 2.இறைவனைக் காதலிப்பது எப்படி?

ரூமியும் வேதாத்திரி மகரிஷியும்  மானுடத்திற்கு வழங்கிய தத்துவங்களையும் வழிகாட்டுதலையும் ஒப்பாய்வு நோக்கில் சிந்திப்போம்.

இறைக்காதலைப் பற்றி பேசும் மகான்கள்

- “காதலைவிட முக்கியமானது உலகில் எதுவுமில்லை
  காதல் காற்றைப் போன்றது” - ரூமி

ரூமி இறைக்காதலைத்தான் பாடியிருக்கிறார்.

ரூமியின்"கிதாபுல் மஸ்னவி" யிலிருந்து- 25 வது பாடல்

- காதலாலே பூதவுடல் விண்ணுலகு சென்றது. அதனால்தான் மலையும் ஆடத்தொடங்கி சுறுசுறுப்படைந்தது.
- காதலனே, ஸீனா மலைக்கு உணர்ச்சியூட்டியது காதல். அதனால்தான் ஸீனா போதையுற்றது. மூஸா (அலை) (□□□□□) மயங்கி விழுந்தார்கள்.

- என் இயல்புடன் இயைந்த ஒருத்தியுடன் நான் உதடு பொருத்த முடியுமாயின், நானும் புல்லாங்குழலைப்போல் சொல்லக்கூடிய அனைத்தையும் சொல்லி விடுவேன்.
- தன் மொழியில் பேசும் ஒருவரிடமிருந்து பிரிக்கப்பட்ட எவனும், நூற்றுக்கணக்கில் பாடல்களைக் கற்றிருப்பினும் அவன் பாட இயலாத ஊமையேயாவான்.
- ரோஜா மறைந்து, பூந்தோட்டத்தின் பசுமை மாண்டபின் புல்புல்லின் கதையை நீ கேட்க முடியாமல் போய்விடும். (30 வது பாடல்)
- காதலியே யாவுமாவாள். காதலன் ஒரு திரையேயன்றி வேறல்ல. காதலிதான் ஜீவன். காதலன் உயிரற்ற ஜடமே.
- காதலிக்கு அவன்மீது பற்றில்லாவிடின் அவன் சிறகில்லாத பறவைதான்; அந்தோ அவன் நிலை பரிதாபத்துக்குரியதன்றோ!
- என் காதலியின் வெளிச்சம் எனக்கு முன்னாலும் பின்னாலும் இல்லாமல் இருக்கும் நிலையில் முன்-பின் பற்றிய தன்னுணர்வு எனக்கு இருப்பதெங்கனம்?
- இந்த வார்த்தை வெளியாக்கப்படவேண்டும் என்று காதலின் சித்தத்தில் எண்ணமுண்டாகிவிட்டது. கண்ணாடி பிரதிபலிக்காவிடில் அது எப்படி கண்ணாடியாகும்?
- ஆத்மாவின் கண்ணாடி எதையும் பிரதிபலிப்பதில்லை என்பதையும் நீ அறிவாயா? அதன் முகத்தின் மீதுள்ள துரு அகற்றப்பட்டதுதான் அதன் காரணம்.

**காதல்** (*Love*) என்பது உயிரினங்களுக்கிடையே ஏற்படும் பாலியல் ஈர்ப்பு, அன்பு, அக்கறை உணர்வு, சேர்ந்து வாழவேண்டும் என்பவனவற்றை உடைய ஓர் ஆசை ஆகும்.

பொருட்கள், இயற்கை, தொழில், கலை, இறைவன், கருத்தியல்கள் என பலவற்றை நோக்கியும் காதல் ஏற்படும் என்று கூறப்பட்டாலும், அவற்றின் பொருள் வேறுபட்டது.

இலக்கியங்களான நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு,கலித்தொகை , குறிஞ்சிப்பாட்டு, முல்லைப்பாட்டு, பட்டினப்பாலை, திருக்குறள், அகநானூறு, குறுந்தொகை போன்ற நூல்களிலும், காதலைப் பற்றி விரிவாக கூறப்பட்டுள்ளது.

இவைகளில் காதல் என்ற சொல் **அகம்** என்ற சொல்லில் கையாளப்பட்டுள்ளது.

மாணிக்கவாசகர் இறைவனிடம் கொண்ட காதலை திருவாசகத்திலும் திருக்கோவையாரிலும் பார்க்கலாம்.

மாணிக்கவாசகரின் ஒவ்வொரு காதல் கடிதங்களும் ஒரு காவியமே.

மாணிக்கவாசகரும் காதல் செய்தார். குதிரை வாங்குவதற்காகச் சென்றவரை இறைவன் தாமே ஆட்கொண்டார். தனது தாளில் சேர்த்துக்கொண்டார். அவர் பெற்றுக்கொண்ட திருவடி அனுபவத்தினை வைப்பதற்கு இடமில்லாமல் தவித்துக்கொண்டிருந்தார்.

அமைச்சராக இருந்தவர் தற்போது அடியவராகிவிட்டார்;. மக்கள் இவரைப் பார்த்து ஏளனம் செய்கிறார்கள்.

எவ்வளவு பெரிய படிப்பு; எவ்வளவு பெரிய பட்டம்; எவ்வளவு அதிகாரம் இவை எல்லாவற்றையும் துறந்து விட்டு இது என்ன இப்படித் திரிகின்றார்?

அனைவரும் எள்ளி நகையாடுகின்றனர். அந்த எள்ளி நகையாடுதலைப் பொருட்படுத்தாத ஓர் உயரிய ஞானத்தை இறைவன் மாணிக்கவாசகருக்கு அளித்தான்.

திருப்பெருந்துறையில் தன்னை வலிய ஆட்கொண்ட திருவடியினைத் தான் மீண்டும் அனுபவிக்க வேண்டும் என்பது ஓர் ஆசை.

அடியவர் கூட்டில் சேர விரும்புவது ஓர் ஆசை என்று இருவித ஆசைகள் மாணிக்கவாசகருக்கு இருந்தது.

ஊர் ஊராகத் திரிந்து தன் தலைவன் திருவடியினையும் அடியவர் கூட்டத்தையும் தேடுகின்றார். அதற்காகக் காதல் செய்தார்.

காலம் உண்டாகவே காதல் செய்தார். எதிர்பாராத இன்ப அதிர்ச்சி ஒன்று அவருக்குக் காத்திருந்தது. திருப்பெருந்துறையிலிருந்து புறப்பட்டுத் தேடிக்கொண்டே வந்தார். கடைசியாக திருக்கழுக்குன்றம் வந்தார்.

"பேதம் இல்லது ஓர் கற்பு அளித்த
பெருந்துறைப் பெரு வெள்ளமே
ஏதமே பல பேச நீ எனை
ஏதிலார் முனம் என் செய்தாய்
சாதல் சாதல் பொல்லாமை அற்ற
தனிச் சரண் சரணாம் எனக்
காதலால் உனை ஓத நீ வந்து
காட்டினாய் கழுக்குன்றிலே" (திருவாசகம்)

பேதம் இல்லது ஓர் கற்பு என்பது ஆன்ம நேயத்தின் ஓர் உன்னத நிலை. இறையருள் பெறவும், இறைவனோடு இரண்டறக் கலக்கவும் விரும்பும் ஆன்மா தனது ஆன்ம பயணத்தின் நிறைவாக அடைய வேண்டிய ஓர் பக்குவம்.

"எத்துணையும் பேதமுறாது எவ்வுயிரும் தம் உயிர்போல் நினைப்பது என்னும் அருள் அனுபவ நிலை. அந்நிலையே பேதம் இல்லாத கற்பு நிலையாகும்.

அவ்வனுபவம் பெறும் உயிர் பேதம் இல்லாத கற்பு நிலையிலேயே நிற்கும் என்பது அருளாளர்கள் கண்ட உண்மை.

பார்க்கும் இடம் எங்கும் நீக்கமற நிறைந்துள்ள பரிபூரணத்தை உணர்கின்ற ஓர் உணர்வு நிலை அது.

அந்த உணர்வு நிலையினைத் திருக்கழுக்குன்றத்தில் அருளுகின்றார் சிவபெருமான். அத்துடன் திருவடிப் பேற்றையும் மீண்டும் அளிக்கின்றார். திருவடி இவருக்கு என்ன பேற்றை நல்கியது.

"...சாதல் சாதல் பொல்லாமை அற்ற

தனிச் சரண் சரணாம் எனக்

காதலால் உனை ஓத நீ வந்து
காட்டினாய்...” (திருவாசகம்)

சாதல் என்பது மிகவும் துயர் தரக்கூடியது. பொறி, புலன்கள் கடந்த மகான்களைக் கூட ஒரு கண நேரம் செயல் இழக்கச் செய்யக் கூடியது.

அந்த சாவையும் மாணிக்கவாசகர் வென்றுவிட்டார். இவையெல்லாம் எப்படி நடந்தது! ‘காதலால் உனை ஓத என்கின்றார்.

நெஞ்சகமே கோயில்! நினைவே சுகந்தம்! அன்பே
மஞ்சன நீர்! பூசை கொள்ளவாராய்!
பராபரமே!

என்று அழைக்கிறார் தாயுமானவர்.

மாணிக்கவாசகரோ,
மலரிட்டுப் பூசை செய்வதா? பாலாபிஷேகம் செய்வதா? அல்லது தங்க அணிகலன்கள் அணிவித்து வணங்குவதா?

நம் கண்களால் பார்க்கமுடியாத இறைவன், நாம் செலுத்தும் அன்பை ஏற்றுக்கொள்கிறானா என்று தெரிந்துகொள்வது எப்படி என்று கேட்கும் சிவனடியார்களிடம் மாணிக்கவாசகர், “திருக்கோயிலில் இறைவன் வீற்றிருக்கும்போது நம் கண்களால் பார்க்க முடியாத இறைவன் என்று சொல்வது ஏன்? என்றார். அடியவர்கள் பதில் கூற முடியாமல் திகைத்தனர்.

“அசைவற்று இருக்கும் சிலையை இறைவனாகக் கற்பனை செய்து வழிபடும் உங்கள் மனத்தால், அதை இறைவனாக ஏற்றுக்கொள்ள முடியவில்லை; எனவேதான் கண்களால் பார்க்க முடியாத

இறைவன் என்றீர்கள் அல்லவா?” என்று மணிவாசகர் கேட்டதும் அடியவர்கள் வெட்கித் தலைகுனிந்தனர்.

“நீங்கள் உயிர்ப்புள்ள இறைவனைக் கண்டு, காதல் செய்ய விரும்புகிறீர்களா? அப்படியானால், இறைவன் நிறைந்திருக்கும் அனைத்து உயிர்களையும், குறிப்பாக, சக மனிதர்களைக் காதலியுங்கள்” என்றார் மணிவாசகர். அப்படி என்றால் **குடும்பக் காதல் இறைக் காதலாகுமா?**

“ஐயனே! நான் என் குழந்தைகள், மனைவி, அன்னை-தந்தை, உடன்பிறந்தோரிடம் மிக்க அன்பைச் செலுத்துகிறேன். நான் பாடுபட்டுச் சேர்க்கும் பொருளையும், பணத்தையும் அவர்களுக்கே தருகிறேன். அவர்களிடமும் இறைவன் நிறைந்திருப்பதால், எனது இச்செயல் இறைவனைக் காதலித்ததற்குச் சமம் என்று கொள்ளலாமா?” என்றார் ஒரு அடியவர்.

**கலக்கம் தெளிவித்த வித்தகத்தேவன்**

“அன்பர்களே! பிறப்பாலும், திருமணத்தாலும் ஏற்பட்ட பாசத்தினால், உங்களுடையவை என்று கருதும் சொந்தங்களிடம் காட்டும் காதல் இயல்பானது;
ஆயினும், என் குடும்பம் என்ற அளவில் அதுவும் சுயநலத்தின் ஒரு வகையே! பாரபட்சம் பார்க்காமல் எல்லா உயிர்களுக்கும் கருணை செய்யும் இறைவனைக் காதலிக்க விரும்பினால், சொந்த பந்தங்களிடம் காட்டும் அதே காதலை, துன்பப்படும் ஏழைகளிடமும் காட்டுவதே சிறந்த வழியும், பக்தியுமாகும்.

இறைவனுக்கு நீங்கள் செலுத்த விரும்புகின்ற காணிக்கைகளைத் துன்பப்படும் ஏழைகளுக்குக் கொடுங்கள்; அவை உடனடியாக இறைவனிடம் சென்று சேரும்.

என் பணம், என் மனைவி, என் மக்கள், என் சாதி, என் அறிவு எனப் பித்துப்பிடித்து அலையும் இந்தஉலகத்தில், சிவபெருமான் தன்

திருவடிகளை என் தலைமேல் வைத்ததுமே என்னிடமிருந்த சித்த விகாரக் கலக்கம் தெளிந்து, அனைவரிடமும் அன்புகாட்டும் தெளிவு பிறந்தது; நீங்களும் தெளிவடையுங்கள்’ என்று அருளினார் மணிவாசகர்.

*வைத்த நிதி, பெண்டிர், மக்கள், குலம், கல்வி, என்னும்*
*பித்த உலகில், பிறப்போடு இறப்பு என்னும்*
*சித்த விகாரக் கலக்கம் தெளிவித்த*
*வித்தகத் தேவற்கே சென்று ஊதாய் கோத்தும்பீ*(திருவாசகம்:10-6)

செல்வத்தின் பயன் ஏழையர்க்கும் கொடுத்தல் என்று உணராமல், அவை நிலையுடையன என்று நினைத்துப் பதுக்கி வைப்பது ‘பேதைமை’ என்பதால், இவ்வுலகைப் ‘பித்த உலகு’ என்றார். இறைவன் இதைத் தெளியவைத்ததால், ‘சித்த விகாரக் கலக்கம் தெளிவித்த வித்தகத் தேவர்’ என்றார்.

ஓர் உயிர்மற்றோர் உயிரோடு அன்பினால். ”தான்” என்னும் அகந்தை அகன்று இரண்டறக் கலத்தலாகிய அனுபமே காதல் அனுபவம். இங்கு இறைக்காதலை வேதாத்திரியம் சொல்லியுள்ளது.

இரண்டறக் கலத்தல் பற்றி வேதாத்திரியம் பாடுகிறது.

இறைநிலையோடு எண்ணத்தை கலக்க விட்டு,
　ஏற்படும் ஓர் அமைதியில் விழிப்பாய் நிற்க
நிறைநிலையே தானாக உணர்வதாகும்,
　நித்தம் நித்தம் உயிர் உடலில் இயங்கும் மட்டும்,
உறைந்து உறைந்து இந்நிலையில் பழகிக்கொள்ள,
　உலக இன்பங்களிலே அளவு கிட்டும்,
கரை நீங்கி அறிவு மெய்ப்பொருளாகும்,
　கரைந்துபோம் தன்முனைப்பு காணும் தெய்வம்” (ஞாக.பா.1487)

இவ்வளவு எளிமையாக விளக்கம் கூறி நம்மை செம்மை படுத்திவிட்டார் மகரிஷி.

எல்லா யோக மார்க்கங்களும் முயற்சியை மையமாக வைத்து தான். நாமும் எதுவரை முயற்சி செய்ய வேண்டும் என்றால், இறைநிலையோடு எண்ணத்தை கலக்க விடும் வரை முயற்சி செய்தால் போதும்.

இதில் நம்மை முழுமையாக உணர்வு ரீதியாக நம்முடைய உணர்வை அகன்ற நிலைக்கு கொண்டு போகப்போக ஒரு கட்டத்தில் தானாக விரிய முடியாமல், விரிந்து செல்வதற்கு இடமும் இல்லாமல் ஒரு நிலைக்கு மனம் வரும்.

அப்போது அந்நிலையில் ஒரு அமைதி நிலை ஏற்படும்.

அந்நிலையில் மனம் விழிப்போடு நின்றால் அமைதியில் மனம் உறைந்து காணாமல் போகும்.

**அமைதி என்பது கற்பிப்பது அல்ல, கற்பிக்கப் படுவதும் அல்ல. உருவாக்குவதும் அல்ல, உருவாக்கப்படுவதும் அல்ல. தானாய் தானே நிலை பெறுவதே அமைதி நிலை.**

இது தான் மௌன நிலையும் ஆகும். இந்த நிலையை வார்த்தையால் விளக்கிச் சொல்லவே முடியாது.

அப்படி சொன்னால், அது பொய் தான். இங்கு தான் ‘தியானம்’ என்று ஒன்று மலரவே ஆரம்பிக்கிறது.

இதற்கு முந்தைய நிலை வரை மனம் ஓர்மை படுவதற்கு ஒரு பயிற்சி முறை தானே தவிர, அவைகள் தியானமாக கருதுவது தவறு.

தியானம் என்பது ஒரு செயல் அல்ல. தானாக நிகழ்வது. ஏன் விழிப்பாய் நிற்க வேண்டும் என்றால், இங்கு கூட நம்முடைய கர்ம வினை நம்முடைய உணர்வு தளத்தை தாக்குவதற்கு தயாராக இருக்கும்.

நம்மை அங்கேயே தங்க வைப்பதற்கு தன்னுடைய முழு முயற்சியோடு செயல்படும்.

அதனால், விழிப்போடு இருப்போமேயானால், இங்கு என்ன இருக்கிறது? என்றால், முன்னால் உற்பத்தியான சுத்தவெளி என்ற நிலையைக் கடந்து, நம்மால் உருவான எண்ணமற்ற, சூன்யமான அரூபமான எங்கும் முடிவில்லாத, உணர்வு தளம் வரும்.

அதுதான் சுத்தவெளி உணர்வு. இந்த ஆகாய பெருவெளியில் வெறும் உணர்பவன் மற்றும் உணரப்படும் சூன்ய பெருவெளி மட்டுமே இருக்க முடியும்.

முதலில் நாம் உருவாக்கிய வெளி. பிறகு அதுவே நமக்குள் தானாக மலர்ந்த ஒரு விஷயம். இது தானாக சித்தியான ஒரு நிலை.

அமைதி வந்துவிட்டால் தேடுதல் நின்று விடும். தியானத்தின் மீதான ஈர்ப்பும், கவர்ச்சியும் விட்டு விலகிவிடும்.

இந்த இடத்தில் தான் நிறைய பேருக்கு குழப்பம் உண்டாகும் இடம்.

அதனால் இதன் அருகில் வந்தவுடனயே அது தான் சுத்தவெளி அனுபவம் என்று உறுதி செய்து கொண்டு அதில் இன்னும் ஆழ்ந்து போகாமல், அடுத்த அடுத்த மார்்கங்களை நோக்கி நகர ஆரமித்து விடுகிறார்கள்.

இந்த இடத்திற்கு வந்துவிட்டோமானால் சர்வ கல்பத்தை நெருங்கி விட்டோம் என்று பொருள். இந்நிலையில் நாம் இன்னும் ஆழ்ந்து நம்மை இழக்க தயாராகிவிட்டால் சர்விகல்ப நிலை.

இந்த உணர்வை உணர்வது யார்? எது? உடலா? இல்லை மனமா? உயிரா? தெரியாது.

ஆனால் உணர்வு மட்டும் இருக்கும். ஆக, நம்மால் உணரப்படும் அந்த எல்லையற்ற மௌனம், தெய்வீக வெளி, இந்நிலையில் தான் “நிறைநிலை” என்ற அடுத்த கட்டம் நிகழும்.

இந்த வார்த்தைகள் எல்லாம் மகரிஷி யோசித்து எழுதவில்லை. அது (இறை) அவராக தன்னை வெளிப்படுத்தி வந்தவைகள் தான். இது தான் தற்செயல் இயக்கம்.

ஏனெனில், மகரிஷி என்ற ஒரு தனி மனிதன் அங்கு இல்லை. செயல் மட்டுமே இருக்கிறது, செய்பவன் இல்லாமல் இருக்கிறது. இது தான் "நிறைநிலையே தானாக உணர்வதாகும்".

உணரப்படும் காணாமல் போய்விட்டது. உணர்பவனும் காணாமல் போய்விட்டான்.

அதனால் தான் "நான் என்ற சிற்றறிவை நான் கடந்த போது நான் நீயாய் கூர்தலறம் வந்தியல்பு அறிந்தேன்" என்று கூறுகிறார் மகரிஷி.

ஆக, இயல்பில் அறிவதற்கு ஒன்றுமே இல்லை. நான் உருவாகினதும் போய்விட்டது.

என்னுள் உருவானதும் போய்விட்டது. நான் நானாகவே நிற்கிறேன். அனால், பழைய நான் இல்லை. கவனித்த நான் காணாமல் போய்விட்டேன். அப்போ இருப்பது என்னவென்றால் அது தான் "தான்" (தானாய், சுயமாய்)

- ஓர் உயிர்மற்றோர் உயிரோடு அன்பினால். "தான்" என்னும் அகந்தை அகன்று இரண்டறக் கலத்தலாகிய அனுபமே காதல் அனுபவம்.
- இங்கு இறைக்காதலை ரூமியும் வேதாத்திரி மகரிஷியும் அருமையாக மானுடத்திற்கு சொல்லியுள்ளார்கள்.

## 3.நினைப்பே நடப்பு

- *நீ எதைத் தேடிக் கொண்டிருக்கிறாயோ
  அது உன்னைத் தேடிக்
  கொண்டிருக்கிறது" - ரூமி

நமது எண்ணமே நாமாகிறோம் என்கிறது வேதாத்திரியம்.

எண்ணியவெல்லாம் எண்ணியபடியே யாகும்
எண்ணத்தில் உறுதியும் ஒழுங்கும் அமைந்திடில்." (ஞானக்களஞ்சியம் பாடல்1540)

# 4.கடவுளைத் தேடும் பக்தர்கள்

ஜலாலுதின் ரூமியின் பிரபலமான பாடல்

கடவுளைக் கிறுத்துவர்களிடமும்,சிலுவையிலும் தேடினேன்

...அவர் அங்கு காணப்படவில்லை,

உருவ வழிபாட்டுக் கோயில்களுக்குப் போனேன்

..அவர் அங்கு இருந்த அடையாளமே இல்லை.

ஹீரா மலைக்குள் நுழைந்தேன். காந்தார் வரை சென்றேன்.

...ஆனால் அவர் அங்கு இல்லை.

காஸஸ் மலைக்குன்றின் உச்சிக்கு ஒரு உறுதியுடன் போனேன்

...அங்கு அன்கா பழங்குடிக்களைத்தான் கண்டேன்.

இளைமையும்,முதுமையும் கூடும் காபா நோக்கி திசை மாற்றினேன்,

...கடவுள் அங்குமில்லை.

மெய் ஞானத்திற்கு திரும்பி இன் சினா விடம் விசாரித்தேன்.

..அவர் எல்லைக்குள் கடவுள் இல்லை.

இறைத்தூதர் இரண்டு வில் தூரத்தில் அனுபவித்த

ஆன்மீக விஸ்வரூபக் காட்சி நடந்த இடத்திற்குச் சென்றேன்.

கடவுள் அந்த பெருமை மிக்க சதுக்கத்திலும் இல்லை.

கடைசியில், நான் எனது மனதுக்குள் தேடினேன்.

அங்கே அவரைப் பார்த்தேன். அவர் வேறெங்கும் இல்லை.” (ரூமி)

## **வேதாத்திரியத்தின்** கடவுள் தத்துவம்

"இறை" என்பது -தெய்வ நிலையைக் குறிக்கும் ஒரு சிறப்புச் சொல். "தெய்வம்" என்பது -அரூபமான பேராதாராச் சக்தி".

மாபெரும் பேரியக்க மண்டல நிகழ்ச்சிகள் எல்லாவற்றிற்கும்-மூலமானதும் புலன்களைக் கொண்டு -வேகம், காலம், பருமன், தூரம் என்ற- நான்கு அளவைகளாலும் -கணிக்க முடியாததும், அறிவு புலன்கள் மூலமாகத் தேடும்போது –இல்லையென்றும்-தனது ஆறாவது நிலையின் உயர்விலே ஆராயும்போது- உண்டு என்றும்-உணரக் கூடியதுமான- உண்மை நிலை எதுவோ- அதுவே தெய்வம்- என்று வழங்கப்படுகிறது.

இயற்கை என்பது- எல்லா ஆற்றல்களுக்கும் -அடிப்படையான மூல ஆற்றல்- ஒருங்கிணைப்புப் பேராற்றல்.

"கட+உள் என்று சொல்லிவிட்டான் கருவறிந்தோன்.
    கருத்தறிவயான் ஊன்றி இதைக் கணவில்லை!
கட+உள் என்ற ஆக்கினையின் குறிப்பைமாற்றி,
    கண்டறிந்த நிலைக்கே அப்பெயரைக் கொண்டான்
கட + உள் என்ற இருசொல்லை ஒன்றாய்க்கூட்டிக்
    கடவுள் என்றே சொல்லிச்சொல்லி வழக்கமாச்சு!
கட + உள் என்று மனிதன் ஒருகுறிப்புத் தந்தான்.
    கடவுள் எங்கே? என்று பலர் தேடுகின்றார்." (ஞானக்களஞ்சியம் பா.1121)

## "கடவுளும் ஞானமும் – வேதாத்திரியம்

"கடவுள்ளனப் படுபவனே மனித னானான்!
    கருத்தியங்கிக் கருத்துயர்ந்து கருத்தறிந்தான்!
கடவுளாய் அனைத்தையுமே கண்டு விட்டான்!
    காண்பவனே ஆதியந்த மாகி நின்றான்!
கடவுள்நிலை யறிந்தவனே, அறியா தோர்க்குக்
    கருத்துணர்த்தும் நூல்கள்பல எழுதி வைத்தான்!

கடவுள் இரகசியம் அதனை வெளியாய்க் காட்டும்
கடமையே சிறந்ததெனக் கண்டான் ஞானி!" (ஞானக்களஞ்சியம் பா.1121)

காடு மலை எல்லாம் திரிந்து கடைசியில் தன்னிடமே ஞானத்தை கண்டவர்தான் கௌதம புத்தர்.

"அங்கிங் கெனாதபடி யெங்கும் ப்ரகாசமாய்
ஆனந்த பூர்த்தியாகி
அருளொடு நிறைந்ததெது தன்னருள் வெளிக்குளே
அகிலாண்ட கோடியெல்லாந்
தங்கும் படிக்கிச்சை வைத்துயிர்க் குயிராய்த்
தழைத்ததெது மனவாக்கினில்
தட்டாமல் நின்றதெது சமயகோ டிகளெலாந்
தந்தெய்வம் எந்தெய்வமென்
றெங்குந் தொடர்ந்தெதிர் வழக்கிடவும் நின்றதெது
எங்கணும் பெருவழக்காய்
யாதினும் வல்லவொரு சித்தாகி யின்பமாய்
என்றைக்கு முள்ளதெதுமேல்
கங்குல்பக லறநின்ற எல்லையுள தெதுவது
கருத்திற் கிசைந்ததுவே
கண்ட வெலாமோன வுருவெளிய தாகவுங்
கருதியஞ் சலிசெய்குவாம்" (தாயுமானவர் பாடல் 1)

கடவுளின் விலாசத்தை தந்தவர்தான் நம் தாயுமானவர்.

## 5.மூலத்தை அடைவதே பிறவியின் நோக்கம்

தாதுவாக இருந்த நான் இறந்து. செடியாய் ஆனேன்..

செடியாய் இருந்த நான் இறந்து, மிருகமாய் ஆனேன்.

மிருகமாய் இருந்த நான் இறந்து, மனிதனாய் ஆனேன்
நான் ஏன் ஆஞ்ச வேண்டும்? என்று நான் குறைந்து போனேன்?

ஆயினும் மனிதனாய் இருக்கும் நான், இன்னுமோர் முறை இறப்பேன்
தேவனாகி ஆசிர்வாதத்துடன் உயர்வேன்
தேனாயிருப்பதில் இருந்து நான் போயாக வேண்டும்
இறைவனைத் தவிர அனைத்தும் அழிவைதான்

என்னுடைய தேவ ஆத்மாவை நான் தியாகம் செய்யும்பொழுது
என் மனதும் காணாத ஒன்றாய் ஆவேன் நான்!
ஆஹா! நான் இருக்கத் தேவையில்லை
இல்லாததில்தான் அங்கங்கள் தன் இசைவை அறிவிக்கும்
பின் நாம் அவரிடம் திரும்பிப் போய் விடுவோம்!" - ரூமி

## **வேதாத்திரியத்தின்** பிரபஞ்சத் தன்மாற்றச் சரித்திரம்.




ஏதோஒரு ஆற்றல்- உலகைப் படைத்து- பாதுகாப்பும் , பராமரிப்பும் அளித்து வருகிறது என்ற கருத்தை விட, இறைநிலையே தன்மாற்றம் பெற்று, பிரபஞ்சத்தில் காணும் பொருட்களாகவும், அண்டங்களாகவும் கோடிக்கணக்கான உருவங்களாகவும் -இயங்கிக் கொண்டிருக்கின்றது என்ற பேருண்மையை உணர்த்துவதே- மகரிஷியின் தன்மாற்றச் சரித்திரம் எனும் தத்துவம்.

"இறைநிலையின் தன்மாற்றம் – வேதாத்திரியம்

""இருப்புநிலை சுத்தவெளி இறைவன்என்று உணர்வோம்.

இறைவெளியின் நுண்பகுதி இயங்கும்சுழல் அலைவிண்.

இருப்புநிலை இறைவெளியொடு இயங்கும் விண்உரச

எழுந்தஅலை விரிவலையாம். இதுநிழல் ஆம்அலையும்.

இருப்புநிலை விரிவுஅலை இரண்டிணையக் காந்தம்.

இக்காந்தத் தன்மாற்றம் இம்மூன்றாய்த் தோன்றி,

இருப்புநிலையில் அடங்கும். இதன்விளைவே எங்கும்

எல்லையிலாப் பேரண்டம், இயங்கு அனைத்துயிர்கள்."

(ஞாக.1094)

இந்த வேதாத்திரிய பிரபஞ்ச தன்மாற்றத் தத்துவத்தின்படி தான் மனிதனாக வந்ததை ரூமி தனது கவியில் பாடியுள்ளார்.

"தாதுவாக இருந்த நான் இறந்து. செடியாய் ஆனேன்..

செடியாய் இருந்த நான் இறந்து, மிருகமாய் ஆனேன்.

மிருகமாய் இருந்த நான் இறந்து, மனிதனாய் ஆனேன்"

## சுத்தவெளி தத்துவம் வேதாத்திரியம்

சுத்தவெளி நொறுங்கி இறைத்துகள் ஆயிற்று.
இறைத்துகள்களின் தொகுப்பு தான் விண்.
விண்களின் தொகுப்புகள்தான் தோற்றப் பொருட்கள் அனைத்தும் ஆகும்.

விண்களின் சுற்றோட்டம் தோற்றப் பொருட்களில் சீரான முறையில் அமைந்தபோது உயிரினங்கள் தோன்றின.

முடிவில் சிறப்பான அறிவுடைய மனிதன் தோன்றினான்.

இதுவே சுத்தவெளி எனும் இறைநிலையின் தன்மாற்ற வரலாறு ஆகும். வேதாத்திரியம் விளக்கும் தத்துவம் இதுவாகும்.

## வேதாத்திரியத்தில் இறைநிலைப்பயணம்

உடல் எடுக்கப்பட்டதன் நோக்கம் அறிந்து, அறிவை உயர்த்தி. பரம்பொருளோட இணைதல் வேண்டும்.

எனவே நாம் தொடரும் வாழ்வுப் பயணத்திற்கு வசதியும் பொருத்தமும் உள்ள ஊர்தியாக அமைந்துள்ள இந்த உடலைப் பழுதடையாமல் காத்து இயக்கினால்தான் ஆன்மா தனது லட்சிய எல்லையைக் காலத்தோடு அடையமுடியும்.

இதைத்தான் ரூமி "பின் நாம் அவரிடம் திரும்பிப் போய் விடுவோம்!" என்று தனத பாடலில் பாடியுள்ளார்.

## 6.கனவுலக வாழ்வைப் பற்றி ரூமி

"மரியாதைக்குரிய விருந்தாளி நீ
இந்த உலகின் அற்ப நிலத்துண்டொன்றை
ஒரு பிச்சைக்காரனைப் போல
யாசித்துக் கொண்டிருக்காதே." - ரூமி

இந்த வரிகளில் நம் கனவுலக எளிய வாழ்விலிருந்து விடுபட்டு, இந்தப் பிரபஞ்சம் முழுவதையும் நம்முடையதாக உணரச் செய்யும் சூஃபியின் ஆன்மீக தாக்கத்தை ஒரு கவிதை வடிவில் ஒளியேற்றி எரியச் செய்கிறார் ரூமி.

பிறவியின் நோக்கம் என்ன என்பதை உணர்ந்து கொள்ளுங்கள் புரிந்து கொள்ளுங்கள் என்று ரூமி மானுடத்திற்குச் சொல்கிறார். வேதாத்திரியம் பிறவியின் நோக்கத்தை எளிமையாக பாமரனும் புரிந்த கொள்ளும் வகையில் தந்துள்ளது.

- உனக்கு முன்னும் பின்னும், சூழ்ந்தும், ஊடுருவியும், செயல் ஆற்றிக் கொண்டிருப்பது இயற்கையின் பேராற்றல்.
- இது அணு முதற்கொண்டு, அண்டம் ஈறாக ஒழுங்கு தவறாமல், இயங்கிக் கொண்டிருக்கிறது.
- மனிதச் செயல் ஒவ்வொன்றுக்கும் தக்க விளைவை இன்பமாகவோ, துன்பமாகவே அளித்துக் கொண்டிருக்கிறது.
- இந்த உண்மையை மறவாதே!
- இப்பேராற்றலை மதித்து உனது செயலில் அளவு முறை, ஒழுங்கு இவற்றைக் கடைப்பிடி. இதுவே உணர்ந்த தெய்வ வழிபாடாகும்.
- அப்பேராற்றலோடு இணைந்த மனம் – உணர்ந்த நம்பிக்கை கொண்ட மனம் என்றும் வெற்றியும், மகிழ்ச்சியும், அமைதியும் பெற்று நிறைவு நிலையிலிருந்து வரும். பிறவியின் நோக்கமும் ஈடேறும். - வேதாத்திரியம்

## 7.அவனில் தான் நீ! உன்னில் தான் அவன்!

"நீ கடலின் ஒரு துளியல்ல
ஒரு துளிக்குள் நிறைந்திருக்கும் கடல்" - ரூமி

என்கிறார் ரூமி. இந்த வரிகள் ஒரு தத்துவ ஞானியின் தரிசன வாசலைத் திறக்கிறது.

"எல்லாம் வல்ல தெய்வமது
எங்கும் உள்ளது நீக்கமற
சொல்லால் மட்டும் நம்பாதே
சுயமாய்ச் சிந்தித்தே தெளிவாய்
வல்லாய் உடலில் இயக்கமவன்
வாழ்வில் உயிரில் அறிவும் அவன்
கல்லார் கற்றார் செயல் விளைவாய்க்
காணும் இன்ப துன்பமவன்.

அவனின் இயக்கம் அணுவாற்றல்
அணுவின் கூட்டுப் பக்குவம்நீ
அவனில்தான்நீ உன்னில் அவன்
அவன் யார்? நீயார்? பிரிவேது?
அவனை மறந்தால்நீ சிறியோன்
